# இயல்சாத்து

பொய்கைமுனிபூதத்தார்பேயாழ்வார் தண்
　　பொருநல்வருங்குருகேசன்விட்டுசித்தன் *
துய்யகுலசேகரன்நம்பாணநாதன்
　　தொண்டரடிப்போடிமழிசைவந்தசோதி *
வையமெலாம்மறைவிளங்கவாள்வேலேந்தும்
　　மங்கையர்கோனென்றிவர்கள்மகிழ்ந்துபாடும் *
செய்யதமிழ்மாலைகள்நாம்தெளியவோதித்
　　தெளியாதமறைநிலங்கள்தெளிகின்றோமே.

இன்பத்திலிறைஞ்சுதலிலிசையும்பேற்றில்
　　இகழாதபல்லுறவிலிராகமாற்றில் *
தன்பற்றில்வினைவிலக்கில் தகவோக்கத்தில்
　　தத்துவத்தையுணர்த்துதலில்தன்மையாக்கில் *
அன்பர்க்கேயவதரிக்குமாயனிற்க
　　அருமறைகள்தமிழ்செய்தாந்தாளேகொண்டு *
துன்பற்றமதுரகவிதோன்றக்காட்டும்
　　தொல்வழியேநல்வழிகள்துணிவார்கட்கே.

என்னுயிர்தந்தளித்தவரைச்சரணம்புக்கி
　　யானடைவேஅவர்குருக்கள்நிரைவணங்கிப் *
பின்னருளால்பெரும்பூதூர்வந்தவள்ளல்
　　பெரியநம்பிஆளவந்தார்மணக்கால்நம்பி *
நன்னெறியையவர்க்குரைத்தஉயக்கொண்டார்
　　நாதமுனிசடகோபஞ்சேனைநாதன் *
இன்னமுதத்திருமகளென்றிவரைமுன்னிட்டு
　　எம்பெருமாந்திருவடிகளடைகின்றேனே.

ஆரணநூல்வழிச்செவ்வை யழித்திடுமைதுகர்க்கு * ஒர்
வாரணமாய்அவர் வாதக்கதலிகள்மாய்த்தபிரான் *
ஏரணிகீர்த்தி இராமானுசமுனியின்னுரைசேர் *
சீரணிசிந்தையினோம் சிந்தியோமினித்தீவினையே.

நீளவந்தின்றும்விதிவகையால் நினைவொன்றியநாம் *
மீளவந்தின்னும்வினையுடம்பொன்றி விழுந்துழலாது *
ஆளவந்தாரெனவென்று அருள்தந்தும்விளங்கியசீர் *
ஆளவந்தாரடியோம் படியோமினிஅல்வழக்கே.

காளம்வலம்புரியன்ன நற்காதலடியவர்க்குத் *
தாளம்வழங்கித் தமிழ்மறைஇன்னிசைதந்தவள்ளல் *
மூளுந்தவநெறிமூட்டிய நாதமுனிகழலே *
நாளுந்தொழுதொழுவோம் நமக்கார்நிகர்நானிலத்தே.

ஆளுமடைக்கலமென்றெம்மை அம்புயத்தாள்கணவன் *
தாளிணைசேர்ந்து எமக்குமவைதந்ததகவுடையார் *
மூளுமிருட்கள்விள்ள முயன்றோதியமுன்றினுள்ளம் *

நாளுமுகக்கவிங்கே நமக்கோர்விதிவாய்க்கின்றதே.

திருவுடன்வந்தசெழுமணிபோல் திருமாலிதயம் *
மருவிடமென்னமலரடிசூடும் வகைபெறுநாம் *
கருவுடன்வந்தகடுவினையாற்றில் விழுந்துழலாது *
அருவுடன்ஐந்தறிவார் அருள்செய்யஅமைந்தனரே.

விண்ணவவேண்டி விலக்கின்றிமேவும்அடிமையெல்லம் *
மண்ணுலகத்தில் மகிழ்ந்தடைகின்றனர் * வண்துவரைக்
கண்ணனடைக்கலம்கொள்ளக் கடன்கள்கழற்றிய * நம்
பண்ணமருந் தமிழ்வேதமறிந்தபகவர்க்களே.

# வாழித்திருநாமம்

ஸர்வட்ஹேஶதஶாகாலேஷ்வவ்யாஹதபராக்ரமா
ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்.

ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்வலா
திகந்தவ்யாபிநீபுயாத் ஸாஹிலோகஹிதைஷிணீ.

ஸ்ரீமங்ஸ்ரீரங்கஶ்ரியமநுபத்ரவா மநுதிநம்ஸம்வர்த்தய
ஸ்ரீமங்ஸ்ரீரங்கஶ்ரியமநுபத்ரவா மநுதிநமஸம்வர்த்தய.

நமொராமாஜார்யாய வேதாந்தார்த்தப்ரதாயினே
ஆத்ரேயபத்மநாபார்யசுதாய குணஶாலினே.

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம்
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஶிகம்.

வாழியிராமாநுசப்பிள்ளான் * மாதகவால்
வாழும் அணிநிகமாந்தகுரு – வாழியவன் *
மாறன்மறையும் இராமாநுசன்பாஷியமும்
தேறும்படியுரைக்குஞ்சீர்.

வஞ்சப்பரசமயம் மாற்றவந்தோன்வாழியே
மன்னுபுகழ்ப்பூதூரான் மனமுகப்போன்வாழியே
கஞ்சத்திருமங்கை யுகக்கவந்தோன்வாழியே
கலியனுரைகுடிகொண்ட கருத்துடையோன்வாழியே
செஞ்சொல்தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன்வாழியே
திருமலைமால்திருமணியாய்ச் சிறக்கவந்தோன்வாழியே
தஞ்சப்பரகதியைத் தந்தருள்வோன்வாழியே
செந்தமிழ்த்தூப்புல் திருவேங்கடவன்வாழியே.

நானிலமுந்தான்வாழ நான்மறைகள்தாம்வாழ
மாநகரில்மாறன்மறைவாழ – ஞானியர்கள்
சென்னியணிசேர் தூப்புல்வேதாந்ததேசிகன்!

இன்னுமொரு நூற்றாண்டிரும்.

வாழியணிதூப்புல் வருநிகமாந்தாசிரியன்
வாழியவன் பாதாரவிந்தமலர் – வாழியவன்
கோதிலாத்தாண்மலரைக்கொண்டாடிக்கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர்திரள்.

# திருநாள்பாட்டு

வாதாசனவரிவரெனவருமாபாஷியம்வகைபெறுநாள்
வகுளாபரணப்பெருமாள்தமிழின்வாசியறிந்திடுநாள்
பேதாபேதம்பிரமமெனாவகைபிரமந்தெளிவித்திடுநாள்
பேச்சொன்றுக்குச்சததூஷணியைப்பேசியதேசிகநாள்
தீதாகியபலமாயக்களைகளைச்சிக்கெனவென்றிடுநாள்
திக்கெட்டும்புகழ்ஸ்ரீபாஷியத்தைத்தெளியவுரைத்திடுநாள்
ஓதாதோதும்வேதாந்தாரியனுதயஞ்செய்திடுநாள்
உத்தமமானபுரட்டாசித்திருவோணமெனுங்நாளே.

செங்கமலத்தயனன்வைரென்றுபுகழ்ந்துமகிழ்ந்திடுநாள்
சீர்கொளிரானாநுசவெனுமந்திரம்பதிகளில்வாழ்ந்திடுநாள்
செங்கயல்வாளைகள்சேர்வயல்சூழ்ந்தவரங்கர்சிறந்திடுநாள்
சிந்துரவெற்பிடைச்சென்றுதிகழ்ந்தசீர்பதிவாழ்ந்திடுநாள்
தெங்கொடுமாங்கனிதேசிகஞ்சுனைவேங்கடத்தீசர்ப்பிறந்திடுநாள்
சீர்மதியாமமௌலிதந்தேசிகர்பிறந்துவளர்ந்திடுநாள்
பங்கயமாமலர்மங்கைகுணங்களைத்தெளியவெளியிடுநாள்
பார்திகழ்பாத்திரபதத்திருவோணமெனுந்திருநன்னாளே.

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்